பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 10 | ஞாயிற்றுக்கிழமை | 27.10.2024 | அதிர்வு 86

## அடுத்த வருட இறுதிக்குள் மாகாண சபைத் தேர்தல்!

**ஜனாதிபதி அநுர அறிவிப்பு**



அடுத்தவருடம்(2025) இறுதிக்குள் மாகாண சபைத் தேர்தல் நடத்தப் படும் என்று 05▶




### எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில்

## 15 ஆசனங்களைக் கைப்பற்றி தேசிய மக்கள் சக்தி முன்னிலை

**ஐக்கிய மக்கள் சக்திக்கு 6; மொட்டுக்கு 3**

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலின் உத்தியோகபூர்வ முடிவுகள் நேற்று இரவு அறிவிக்கப்பட்டன. அதன்படி, தேசிய மக்கள் சக்தி 17 ஆயிரத்து 295 வாக்குகளைப் பெற்று 15 05▶

### யாழில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த

# தமிழ் மக்கள் கூட்டணியின் ஆதரவாளர்கள் மீது நேற்று கொலைவெறித் தாக்குதல்!

**மூவர் காயங்களுடன் வைத்தியசாலையில்**

(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

**யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரந்தன் பகுதியில் நேற்று சனிக்கிழமை மாலை தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழ் மக்கள் கூட்டணியின் ஆதரவாளர்கள் மீது கொலைவெறித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.** 05▶



# எங்கள் அரசியல் எழுச்சியை தடுத்து நிறுத்தவே முடியாது!



**தாக்குதல் நடத்தியவர்களைப் பொலிஸார் உடன் கைது செய்து கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என மணி வலியுறுத்து**

**(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)**

"தமிழ் மக்கள் கூட்டணியின் அரசியல் எழுச்சியை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. எந்தத் தடை ஏற்பட்டாலும் அதனைத் தாண்டிச் செல்வோம். எமது கட்சியின் ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடத்திய அனைவரையும் பொலிஸார் உடனடியாகக் கைது செய்து அவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்."

– இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் 05▶




நேற்று முன்னிரவில் வடமராட்சி திக்கத்தில் பொதுமக்கள் சந்திப்பு கூட்டம் ஒன்றில் உரையாற்றிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் யாழ் மாவட்ட வேட்பாளருமான எம்.ஏ.சுமந்திரன் இலங்கைத் தமிழர் அரசியலில் புலம்பெயர் பண முதலைகள் இருவர் ஊடகங்கள் சகிதம் நேரடியாக குதித்திருக்கும் சூழலினால் ஏற்பட்டுள்ள ஆபத்துக்களை விவரித்துக் கூறியிருக்கிறார்.

"இந்த இருவரில் ஒருவரினால் ஏற்படக் கூடிய ஆபத்து பற்றி நான் எமது தமிழ் மக்களுக்கு அண்மையில் பேச, மற்றவர் தன்னுடைய தலையில் தொப்பியை போட்டுக்கொண்டு எனக்கு எதிரான எதிர் விமர்சனங்களை அவரே ஆரம்பித்திருக்கிறார்.

"இந்த இரண்டு பண முதலைகளின் அரசியல் தலையீடு தமிழர்களின் மாற்றத்திற்கான புதிய அரசியல் பயணத்தில் பெருங்குழப்பங்களை ஏற்படுத்த வல்லது." – என்று 05▶




# நிகழ்வில் கலந்துகொண்ட சக வேட்பாளர்களை அச்சுறுத்திய தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர்



(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணத்தில் சர்வகட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற வேட்பாளர்கள் கலந்துகொண்ட நிகழ்வில் கேள்வி கேட்ட சக வேட்பாளர்களை அச்சுறுத்தும் வகையில் தேசிய மக்கள் சக்தியின் முதன்மை வேட்பாளர் செயற்பட்டுள்ளார்.

“எமது எம்.பி. எமது குரல்” எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் சர்வ கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் கலந்துகொண்ட நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கோசலை மதன் தலைமையில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர் சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஸ், ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் உமாசந்திரா பிரகாஷ், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் சந்திரகாசன் இளங்கோவன், தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் கருணாநாதன் இளங்குமரன், மக்கள் போராட்ட முன்னணியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் சி.கா.செந்தில்வேல், தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர் மிதிலைச்செல்வி ஸ்ரீபத்மநாதன், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் சசிகலா ரவிராஜ், தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர் கௌரி ஆகியோர் கலந்துகொண்டு கருத்துக்களை முன்வைத்தனர்.

இதன்போது பொதுமக்களின் கருத்துக்களும் கேட்கப்பட்டன.

அந்தச் சந்தர்ப்பத்தில் பொதுமகன் ஒருவர், “தேசிய மக்கள் சக்தி தமிழ் மக்களிடம் முன்வைக்கும் அரசியல் கொள்கை ஒற்றையாட்சியா? சமஷ்டியா? சுயநிர்ணய உரிமையா? இலங்கையில் மூன்று தசாப்தமாக இடம்பெற்ற யுத்தம் இனப்படுகொலையா? போர்க் குற்றமா? போன்ற கேள்விகளைத் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் இளங்குமரனிடம் முன்வைத்தார்.

குறித்த கேள்விகளுக்குப் பதில் வழங்கிய இளங்குமரன், “பலருக்கு ஒற்றையாட்சி என்றால் என்ன, சமஷ்டி என்றால் என்ன எனத் தெரியாது. அதை முதலில் தெளிவுபடுத்த வேண்டிய கடப்பாடு உள்ளது. மக்களுக்கு ஒரு அரசியல் தெளிவை ஏற்படுத்திய பின் மக்களுக்கு எந்தத் தீர்வு வேண்டும் என்பதை மக்களிடமே விடுகின்றோம்.” – என்றார்.

இதன்போது சக வேட்பாளர்களான மணிவண்ணன், உமாசந்திரா பிரகாஷ் குறித்த கேள்விகளுக்கு உரிய பதில் வழங்குமாறு கோரியபோது, சக வேட்பாளர்களை அச்சுறுத்தும் வகையிலும் ஒருமையிலும் பேசினார் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் இளங்குமரன்.

இதனை அந்தக் கூட்டத்திலிருந்த சக வேட்பாளர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். ”ஜே.வி.பி. வேட்பாளர்களை அச்சுறுத்துகின்றது. எங்களை அடக்கி ஆள நினைக்கின்றது” – என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர் சுகாஸ் தெரிவித்தார்.




பாராளுமன்ற தேர்தல் 2024
யாழ் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
சிறீதரன்
சுமந்திரன்
சுகிர்தன்
சயந்தன்
கிருஸ்ணவேணி
பிரகாஷ்
ஆர்னோல்ட்
சுரேகா
இளங்கோவன்
அடையாளம் மாறாத
அரசியல் மாற்றம்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
Ilankai Tamil Arasu Kadchi

# கொலைவெறிக் கலாசாரத்திலிருந்து ஜே.வி.பி. இன்னும் திருந்தவேயில்லை

## முன்னணியின் வேட்பாளர் சட்டத்தரணி சுகாஸ் கடும் கண்டனம்




(பிரபாகரன் டிலக்சன்)

“ஜே.வி.பி. தமது கடந்த கால கொலை வெறிக் கலாசாரத்திலிருந்து இன்னும் திருந்தவில்லை, எதிர்காலத்திலும் மாறப்போவதில்லை என்பதை யாழ். முதன்மை வேட்பாளர் நடந்து கொண்ட விதம் தெளிவாகக் காட்டுகின்றது.”

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர் சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஸ் தெரிவித்தார்.

சர்வகட்சிகளைச் சேர்ந்த யாழ். தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர்கள் கலந்துகொண்ட நிகழ்வில், கேள்வி கேட்ட சக வேட்பாளர்களை அச்சுறுத்தும் வகையில் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் கருணாநாதன் இளங்குமரன் செயற்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே சுகாஸ் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

“அச்சுறுத்துகின்ற பாணியிலும், சபை நாகரிகத்துக்கு ஒவ்வாத வகையிலும், அரச அதிகாரம் தங்களுடைய கையில் இருக்கின்றது என்ற ஆணவத்தோடும், ஏனைய கட்சிகளையும் பொதுமக்களையும் மதிக்காத ஒரு ஜனநாயக அரசியலுக்கு ஒவ்வாத முறையிலும் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் நடந்து கொண்டார்.

இது ஜே.வி.பி. தமது கடந்த கால கொலை வெறிக் கலாசாரத்திலிருந்து இன்னும் திருந்தவில்லை, எதிர்காலத்திலும் மாறப்போவதில்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது.

மேலும், யாழ்ப்பாணம் உட்பட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிறுத்தப்பட்டுள்ள ஜே.வி.பியின் வேட்பாளர்கள், ஜே.வி.பி. முன்வைக்கின்ற கொள்கை நிலைப்பாடுகளுக்கோ அல்லது இலஞ்சம், ஊழல்களை ஒழிப்பதற்கோ தகுதியானவர்கள் அல்லர். ஏனெனில் நிறுத்தப்பட்டுள்ள வேட்பாளர்கள் பலருடைய மறுபக்கம் அவர்களுடைய கொள்கை நிலைப்பாட்டுக்கு முற்றிலும் எதிரானது.

ஒரு பொது வெளியில் ஏற்பாட்டாளர்கள், பொதுமக்கள், பிற கட்சி வேட்பாளர்கள் முன்னிலையில் ஜே.வி.பியின் முதன்மை வேட்பாளர் நடந்து கொண்ட விதம் ஒரு அபாயச் சங்கை ஊதி நிற்கின்றது.

ஒரு ஜனாதிபதிப் பதவியை வைத்துக் கொண்டே இந்த அளவு ஆட்டம் ஆடுகின்ற ஜே.வி.பிக்கு நாடாளுமன்ற அதிகாரமும் கிடைக்கப் பெற்றால் எவ்வளவு தூரம் சர்வாதிகாரமாகச் செயற்படுவார்கள் என்பதற்கு இந்த மக்கள் அரங்கம் சாட்சியாக அமைந்துள்ளது.

இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். தமிழ் மக்கள் சிந்தித்து தென்னிலங்கைக் கட்சிகளுக்கு வாக்களிக்கக் கூடாது. இப்படியானவர்களுக்கு வாக்குகளால் ஒரு பதிலடி வழங்கி தமிழ் மண்ணில் இருந்து அவர்களை விரட்டியக்க வேண்டும்.” – என்றார்.

# கல்வித்துறை பிரச்சினைகளுக்கு உரிய பதில் கிடைக்கவில்லை

## ஜோசப் ஸ்டாலின் தெரிவிப்பு

கல்வி அமைச்சரான பிரதமர் ஹரிணி அமரசூரியவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது கல்வித்துறையில் நிலவும் பிரச்சினைகளுக்கு உரிய பதில் கிடைக்கவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பிரதமர் அலுவலகத்தில் பிரதமருக்கும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் சங்கத்தினருக்கு இடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றிருந்தது.

அதன்பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

”அதிபர் – ஆசிரியர்களின் வேதன முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

இது தொடர்பான விடயங்களை அவர் கேட்டறிந்து கொண்டார்.




எனினும் அதற்கான பதிலை அவர் வழங்கியிருக்கவில்லை.

எதிர்வரும் வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தின்போதே இது தொடர்பான தீர்வுகளை முன்வைக்கவுள்ளதாக கல்வி அமைச்சரான பிரதமர் தெரிவித்தார்.” – என்றார்.

# பாணந்துறையில் கரையொதுங்கிய அடையாளம் தெரியாத ஆணின் சடலம்

களுத்துறை, பாணந்துறை கடற்கரைப் பகுதியில் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது என்று பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

55 முதல் 60 வயது மதிக்கத்தக்க 5 அடி 5 அங்குலம் உயரமுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை சடலமாக மீட்கப்பட்ட மேற்படி நபர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவலும் கிடைக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சடலம் பிரேத பரிசோதனைக்காக பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பாணந்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சுமந்திரன் இந்தக் கூட்டத்தில் எச்சரிக்கை விடுத்தார்.

"பணம் மூலம் வேட்பாளர்களை விலைக்கு வேண்டி, தம் இஷ்டப்படி தாங்கள் தமிழர் அரசியலை முன்னெடுக்கலாம் என்று இந்த பண முதலைகள் திட்டமிடுகின்றன. அது குறித்து தமிழ் மக்கள் அவதானமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்.

"இரண்டுமே ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள்தான். போன் மட்டைகள்தான்" என்று தமது பேச்சை முத்தாய்ப்பாக முடித்தார் சுமந்திரன்.

+ + +

எமனுக்கே அல்வா கொடுத்த எமகாத பேர்வழிகள் கடந்த அரசின் காலத்தில்தான் அதிகம் இருந்திருப்பார்கள் போலும்....!

நாட்டில் பொருளாதார நெருக்கடி மோசமான கட்டத்தை அடைந்ததை அடுத்து கடந்த மூன்று, நான்கு வருடங்களாக வாகன இறக்குமதி தடைப்பட்டு விட்டது. வாகன இறக்குமதிக்குத் தேவையான அந்நிய செலாவணி இல்லாதமையால் இறக்குமதி இடைநிறுத்தப் பட்டிருக்கின்றது. இது இன்னும் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும் என்பது தெரியாது.

வாகன இறக்குமதிக்கு அனுமதி இல்லை என்பதால் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களுக்கு தீர்வையற்ற வாகன உரிமம் வழங்கும் வாய்ப்பும் வழங்கப்படவில்லை.

இதனால் குழம்பிப் போன நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அந்த தீர்வையற்ற வாகன இறக்குமதி உரிமம் மூலம் கிடைக்கும் வருமானத்தை ஈடு செய்யும் நோக்குடன், மதுபானச் சாலை உரிமங்களை வாரி வழங்கி, நேரடியாக மக்களிடம் இருந்து அந்தப் பணத்தை அரசியல்வாதிகள் சூறையாடி கொள்ள முன்னைய ஆட்சி பீடம் வசதி அளித்தது என்பது இப்போது மக்களுக்கு தெரிந்த பரகசியம்.

கடந்த ஆட்சி காலத்தில் வாகன இறக்குமதி தடைப்பட்டு போனாலும், ஆட்சி அதிகாரத்தில் இருந்தோர் சட்டத்துக்கும் அதிகாரிகளுக்கும் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு சட்ட விரோதமாக வாகனங்களை நாட்டுக்குள் இறக்குமதி செய்து, பாவனைக்கு வைத்திருக்கின்றார்கள் என்பது இப்போது மெல்ல மெல்ல அம்பலத்துக்கு வரத் தொடங்கி இருக்கின்றது.

முறையான முறையில் – வகையில் – சுங்க ஒழுங்குகளைக் கடைப்பிடிக்காமல், களவாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட வாகனங்கள் வரிசையாக பிடிபட்டு வருகின்றன.

கடைசியாக கொழும்பு மிரிகான சுபு போகி சாளாக வீதியில் உள்ள மூன்று மாடிக்கட்டடவீடு ஒன்றில் கராஜில் மறைத்து வக்கப்பட்டிருந்த – பல கோடி ரூபா பெறுமதியான – சொகுசு லெக்ஸல் கார் நேற்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

அரசியல்வாதிகளுடன் தொடர்புடைய தரப்புகளிடமிருந்து இவ்வாறு களவாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட வாகனங்கள் வரிசையாக கிக்கி வருகின்றன.

ஒரு முழு வாகனத்தையே களவாக நாட்டுக்குள் இறக்குமதி செய்வது அவ்வளவு இலகுவான காரியமா என்று விடயம் அறிந்த நண்பர் ஒருவரிடம் கேட்டேன்.

அவ்வளவு பெரிய வாகனத்தை இலகுவில் சுங்கத் திணைக்களத்தின் கண்ணில் மண்ணை தூவி விட்டு நாட்டுக்குள் கொண்டு வர முடியுமா என்பது என் கேள்வியாக இருந்தது.

அவர் சிரித்தார்.

"யுத்த காலத்தில் தடை செய்யப்பட்ட பெரிய வாகனங்கள் கூட இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளைத் தாண்டி புலிகளிடம் சென்றடைந்தமை எங்கனம்?" – என்று அவர் பதில் கேள்வி கேட்டார்.

படைத்தரப்பின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு புலிகளின் பிரதேசத்திற்கு பெரிய வாகனங்கள் மட்டுமல்ல, எரிபொருள் வசதிகள் மட்டுமல்ல, ஆயுதங்களும், வெடிகுண்டுகளும் கூட தாராளமாக போய் வந்தன என்பதை அந்த நண்பர் சுட்டிக் காட்டினார்.

தாங்கள் பயங்கரவாதிகள் என்று வகைப்படுத்திய புலிகளின் பிரதேசத்துக்கு ஊழல் மோசடி, களவு, சட்ட விரோத செயற்பாடு போன்றவை மூலம் வாகனங்களை அனுப்பிய இலங்கை அதிகாரிகளுக்கு, இப்படி கண்ணில் மண்ணை தூவி விட்டு வாகனங்களை நாட்டுக்குள் கொண்டு வருவது அப்படி ஒன்றும் கஷ்டமான வேலை இல்லை என்று விளக்கினார் என் நண்பர்.

இந்த நாடு உருப்பட்ட மாதிரி தான்...!

## 15 ஆசனங்களைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஆசனங்களைக் கைப்பற்றி முன்னிலை வகிக்கின்றது.

ஐக்கிய மக்கள் சக்தி 7 ஆயிரத்து 924 வாக்குகளைப் பெற்று 6 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 3 ஆயிரத்து 597 வாக்குகளைப் பெற்று 3 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி 2 ஆயிரத்து 612 வாக்குகளைப் பெற்று 2 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

அத்துடன், பொதுமக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி 2 ஆயிரத்து 612 வாக்குகளைப் பெற்று 2 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

சுயேச்சைக் குழு பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 568. அதன்படி, சுயேச்சைக் குழு, 2 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி ஆயிரத்து 350 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தைத் தமதாக்கிக் கொண்டது.

தேசிய மக்கள் கட்சி 521 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தை வென்றுள்ளது.

நேற்று இரவு நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் காலி மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி டபிள்யூ.ஏ.தர்மசிறி இந்தத் தேர்தல் முடிவுகளை அறிவித்துள்ளார்.

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் 63 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

நேற்றுக் காலை 7 மணிக்கு ஆரம்பமான வாக்குப் பதிவு மாலை 4 மணியுடன் நிறைவடைந்ததையடுத்து, ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களிலும் பதிவான வாக்குகளை எண்ணும் பணிகள் இடம்பெற்றன.

## எங்கள் அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரந்தன் பகுதியில் நேற்று மாலை தேர்தல் பிரசாரப் பணிகளில் ஈடுபட்டிருந்த தமிழ் மக்கள் கூட்டணியின் ஆதரவாளர்கள் மீது வன்முறைக் கும்பல் கொடூர தாக்குதலை நடத்தியிருந்தது. இந்தத் தாக்குதலில் பெண் உள்ளிட்ட மூவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் அவர்களை வைத்தியசாலைக்குச் சென்று நேரில் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மணிவண்ணன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ் மக்கள் கூட்டணி இந்த அரசியல் களத்தில் தவிர்க்க முடியாத பெரும் சக்தியாக உருவெடுத்துள்ளது. மக்களின் அமோக ஆதரவு பெருகி வருகின்றது. எங்களின் எழுச்சியைப் பொறுக்க முடியாத தரப்பு எங்கள் மீது தொடர்ச்சியாக அழுத்தங்களை உபயோகித்து வருகின்றது.

கடந்தவியாழக்கிழமைஎமதுவேட்பாளர் பார்த்தீபன் உள்ளிட்ட இருவரைப் பருத்தித்துறைப் பொலிஸார் சட்டவிரோதமாகக் கைது செய்தனர். இன்று (நேற்று) சனிக்கிழமை எங்கள் அணியினர் கோப்பாய் – கரந்தன் பகுதியில் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த வேளை காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டுள்ளனர். இதெல்லாமே எமது கட்சியை மாத்திரம் இலக்கு வைத்து நடத்தப்படுகின்றது.

எங்கள் அரசியல் எழுச்சியை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. எந்தத் தடை ஏற்பட்டாலும் அதனைத் தாண்டிச் செல்வோம். பெண்கள், ஆண்களை ரவுடக் கும்பல் துரத்தித் துரத்தி அடிப்பது என்பது இந்தச் சமுதாயத்தில் முன்னர் நடந்திருக்காத மிக மோசமான காட்டுமிராண்டித்தனமாகும். இதுவொரு கேவலமான அரசியல் காழ்ப்புணர்ச்சி நடவடிக்கை.

கோப்பாய் பொலிஸார் இந்தத் தாக்குதலாளிகளை உடனடியாகக் கைது செய்து அவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அவர்களுக்குப் பின்னால் புலனாய்வாளர்களோ, அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களோ இருந்தால் அதனை வெளிப்படுத்த வேண்டும்.

இதுவொரு பாரதூரமான தேர்தல் வன்முறை. இதற்கு எதிராக நாங்கள் தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளோம்." – என்றார்.

## தமிழ் மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

கரந்தன் பகுதியில் தமிழ் மக்கள் கூட்டணியின் ஆதரவாளர்கள் நேற்று மாலை தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இதன்போது ஓட்டோவில் வந்த நால்வர் அடங்கிய குழு ஒன்று, அவர்கள் மீது தாக்குதல் நடத்தியது. இதன்போது அவர்கள் அந்தத் தாக்குதலைத் தடுக்க முயன்றனர்.

இதையடுத்து அங்கிருந்து திரும்பிச் சென்ற மேற்படி குழுவினர், சுமார் 30 பேர் அடங்கிய குழுவினரை அழைத்து வந்து அங்கு பிரசாரத்தில் ஈடுபட்ட பெண்கள்மற்றும்ஆண்கள்மீதுமீண்டும்கொலைவெறித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த ஒரு பெண்ணும், இரு ஆண்களும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

மேற்படி பெண் அதிதீவிர சிகிச்சைப் பிரிவிலும், இரு ஆண்களும் 24ஆம் இலக்க விடுதியிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

## அடுத்த வருட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இரத்தினபுரி, கஹாவத்த பகுதியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இந்தத் தகவலை வெளியிட்டார்.

அத்துடன், உள்ளூராட்சி சபைத் தேர்தலும் நடத்தப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.




# ஜே.வி.பி. குறித்து தமிழர்கள் விழிப்பாக இருக்க வேண்டும்

## வடமராட்சியில் கஜேந்திரன் தெரிவிப்பு

ஜே.வி.பி. தொடர்பாக தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலளரும் அந்தக் கட்சியின் யாழ். தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று சனிக் கிழமை நடைபெற்ற

ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிரான, தாயகம், சுயநிர்ணய உரிமைகளுக்காகப் போராடும் ஒரே தலைமை நாம்தான்.

ஏனைய அரசியல் கட்சிகளும், குழுக்களும் 13 ஆவது திருத்தச் சட்டம் வலியுறுத்துகின்ற ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டவர்களே!

கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக சர்வதேச விசாரணையை வலியுறுத்தி வருகின்ற தரப்பு கஜேந்திரகுமார் அணி மாத்திரமே. தமிழ்த் தேசிக் கூட்டமைப்பாக முன்னர் இருந்த சித்தார்த்தன், அடைக்கலநாதன் தொடக்கம் சுமந்திரன் வரை ஐ.நாவிலே உள்ளகப் பொறிமுறைக்காகப் பேசியவர்கள், 13ஐ ஏற்றுக்கொண்டு மாகாண சபைத் தேர்தலை அங்கும் வலியுறுத்திய தரப்புக்களே அவை.

நூற்றுக்கணக்கான குழுக்களும் அரசியல்க கட்சிகளும் பிரிந்து இருந்தாலும் கூட இந்தக் கொள்கை என்று வருகின்றபோது இரண்டே இரண்டு நிலைப்பாடுகள் தான் உள்ளன. பொறுப்புக்கூறல் மற்றும் தீர்வு விடயங்களிலும் இரண்டே இரண்டு நிலைப்பாடுகள்தான் இருக்கின்றன.

தீர்வை விடயத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அணியினர் தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ் வேண்டும் என்ற நிலைப்பாட்டிலே உள்ளது.

ஏனைய அனைத்துத் தரப்பினரும் ஒற்றையாட்சிக்குள் 13ஐ அல்லது ஏக்கிய இராட்சியத்தை ஏற்றுக்கொண்ட தரப்பினரே! அது தமிழசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திலே வருகின்ற சுமந்திரன், சிறீதரன் அணிகளாக இருக்கலாம் அல்லது சங்குச் சின்னத்தில் வருகின்ற சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச் சந்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சியாக இருக்கலாம் அல்லது மான் சின்னத்திலே வருகின்ற பார் விக்னேஸ்வரன் கும்பலாக இருக்கலாம். அனைவருமே இந்த 13 மற்றும் ஏக்கிய இராட்சியத்தை ஏற்றுக்கொண்டவர்கள். எல்லோரும் உள்ளக விசாரணையைக் கோருபவர்கள். இனப்படுகொலையாளிகளுக்கு எதிராக சர்வதேச விசாரணையை வேண்டாம் என்று கூறுபவர்கள்.

இந்த விடயத்திலே இங்கு எம் மீது நடத்தப்பட்டது ஒரு இனப்படுகொலை, இனப்படுகொலைக்குச் சர்வதேச விசாரணை வேண்டும் என்று வலியுறுத்துகின்ற ஒரேயொரு தரப்பாக சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகின்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாம் சார்ந்த அணி மாத்திரம் தான்.

ஆகவே, இந்த இரண்டே இரண்டு நிலைப்பாடுகள்தான் இருக்கின்றன. குறிப்பாக இத்தனை கட்சிகளும், குழுக்களும் அரசினால் திட்டமிடப்பட்டு இறக்கப்பட்டுள்ளன.

கொள்கையோடு உள்ள கஜேந்திரகுமார் அணியினரை மக்கள் கண்டுவிடக் கூடாது , அதைக் குழப்பட வேண்டும் என்பதற்காக மட்டும்தான் இத்தனை கட்சிகளும், குழுக்களும் களமிறக்கப்பட்டுள்ளன.

ஆகவே, இதனை மக்கள் விளங்கிக் கொண்டு அனைத்துத் தரப்புக்களையும் புறக்கணிக்க வேண்டும். ஜே.வி.பி. தொடர்பாக தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

1994 ஆம் ஆண்டில் இருந்து தொடர்சியாகத் தொடர் குற்றச் செயல்கள் புரிந்து ஆட்சியாளர்களுடன் இணைந்து இந்த நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு வந்த ஈ.பி.டி.பியை ஜனாதிபதி அநுர அணைக்கின்றார் என்றால் இதற்குப் பிறகும் வடக்கு, கிழக்கில் அநுர ஊழலைக் கட்டுப்படுத்துவார் என்று நாங்கள் யாராவது நம்புவோமாக இருந்தால் எம்மைப் போன்ற அடிமுட்டாள்கள் வேற யாரும் இருக்க முடியாது.

ஆகவே, இனியும் தமிழ் மக்கள் ஏமாறாமல் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்குப் பின்னால் அணிதிரளுமாறு நாம் விநயமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.” – என்றார்.



# சுற்றுலா நிலையங்களுக்கு தொடர்ந்து பொலிஸ் பாதுகாப்பு அதிகரிப்பு

சுற்றுலா நிலையங்களுக்கு பாதுகாப்பு தொடர்ந்தும் பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதற்காக பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், இராணுவ உத்தியோகத்தர்கள், விமானப்படையினர் மற்றும் கடற்படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது

அறுகம்பை, ஹிக்கடுவ, வெலிகம, மிரிஸ்ஸ, திக்வெல்ல உள்ளிட்ட சுற்றுலா நிலையங்களில் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் விசேட அதிரடிப்படையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அறுகம்பையில் உள்ள சுற்றுலாத் நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டதாகச் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட மூவரிடமும் தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

# மின்சாரம் தாக்கி 6 வயது சிறுவன் பரிதாப மரணம்

கம்பஹா, வெயங்கொடை, அலவல பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார் என்று அத்தனகல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

வெயங்கொடை, அலவல பிரதேசத்தைச் சேர்ந்த 6 வயதுடைய தேஜான் தினுவர என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

மேற்படி சிறுவன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தனது வீட்டுக்குள் விளையாடிக் கொண்டிருக்கும் போது சமையல் அறையில் உள்ள குளிர்சாதனப் பெட்டியின் கீழ் பகுதியில் கையை வைத்துள்ள நிலையில் மின்சாரம் தாக்கிக் கீழே மயங்கி விழுந்துள்ளார்.

பின்னர், சிறுவனின் தந்தை உடனடியாகச் சிறுவனை வதுபிட்டிவல ஆதார வைத்தியசாலையில் சேர்த்தபோது சிறுவன் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறுவனின் சடலம் மீதான பிரேத பரிசோதனை வதுபிட்டிவல வைத்தியசாலையில் நேற்று சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பில் அத்தனகல்ல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் இரத்த வாந்தி எடுத்தவர் உயிரிழப்பு!



யாழ்ப்பாணத்தில் ஆண் ஒருவர் இரத்த வாந்தி எடுத்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி, கரவெட்டி பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

இவருக்குப் பல வருடங்களுக்கு முன்னர் மின்சாரம் தாக்கியிருந்தது. அதன்பின்னர் இவருக்கு இடையிடையே வாந்தி ஏற்படுவது வழமை.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் இவருக்கு இரத்த வாந்தி ஏற்பட்டது. இவ்வாறான சூழ்நிலையில் 11 மணியளவில் மந்திகை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் இரவு அவர் உயிரிழந்தார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரஞ்சனுக்கு நெருக்கடி

புலம்பெயர் வர்த்தகப் புள்ளி ஒருவரின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சியின் சார்பில் இந்தத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் தலைமை வேட்பாளராகவும் கட்சியின் தலைவராகவும் நிலை நிறுத்தப்படும் நடிகர் ரஞ்சன் ராமநாயக்க தேர்தல் ஆட்சேபனை வழக்கு ஒன்றை அடிப்படை உரிமை விவகாரமாக உயர் நீதிமன்றத்தில் எதிர்கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

தென்னிலங்கை மக்கள் மத்தியில் நற்பெயரையும் வரவேற்பையும் ஆதரவையும் செல்வாக்கையும் பெற்றவர் ரஞ்சன் ராமநாயக்க.

அவரது நாடாளுமன்ற வெற்றி பெரும்பாலும் உறுதி என்ற எண்ணப்பாடு தீவிரமடைந்து வரும் நிலையில் அவருக்கு இந்தச் சட்ட நெருக்கடி வந்திருக்கின்றது.

கம்பஹா மாவட்டத்தில் அவரை எதிர்த்து சுயேச்சையாகப் போட்டியிடும் ஒரு வேட்பாளரினால் இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் கீழ் 2021 ஜனவரியில் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நான்கு வருடச் சிறை தண்டனை உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டது.

எனினும் பிரதம நீதியரசரிடமும் ஏனைய நீதிமன்ற நீதிபதிகளிடமும் மன்னிப்பு கோருவதோடு இத்தகைய நடவடிக்கைகள் மீள இடம்பெறாது என சத்திய கடுதாசி மூலம் நடிகர் ரஞ்சன் ராமநாயக்க உறுதி அளித்ததின் பேரில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அவருக்கு 2022 இல் நிபந்தனை மன்னிப்பு வழங்கப்பட்டது.

ரஞ்சன் ராமநாயக்காவின் சிறை தண்டனையிலிருந்து அவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்ட போதிலும் மேற்படி தண்டனையால் ஏழு வருட காலத்துக்கு அவர் இழந்த குடியுரிமையை மீளப் பெறுவதற்கான மன்னிப்பு அதில் இடம்பெற்று இருக்கவில்லை என்று சில தரப்புகள் கூறுகின்றன.

அதைக் காரணம் காட்டியே குடியுரிமை இழந்தவர் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடமுடியாதுஎன்றசட்டவிவகாரத்தைமுன் வைத்து மேற்படி வழக்கை சுயேச்சைக் குழு உறுப்பினர் தாக்கல் செய்திருக்கிறார்.

ஆனால், 'நிபந்தனை மன்னிப்பு' என்ற தலைப்பில் இந்த மன்னிப்புப் பிரகடனத்தை அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த போதிலும் அதில் நிபந்தனை எதனையும் அவர் குறிப்பிடவேயில்லை, அதனால் ரஞ்சனுக்கு வழங்கப்பட்டது முழுமையான மன்னிப்பே, ஆகவே தேர்தலில் போட்டியிட அவருக்குத் தடை ஏதுமில்லை என வேறு சில சட்ட வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

கடந்த மூன்றாம் திகதி புதிய ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவுக்கு தன்னுடைய இடைநிறுத்தப்பட்டுள்ள குடியுரிமையை மீளப் பெறக்கூடிய வகையில் - அந்த குடியுரிமை தடையை நீக்கும் வகையில் - பிரகடனத்தை வழங்குமாறு கோரி ரஞ்சன் ராமநாயக்க கடிதம் ஒன்றை எழுதி உள்ளார் எனக் கூறப்படுகிறது.

தமக்கு வழங்கப்பட்ட சிறை விடுவிப்பு சுதந்திரம், தம்முடைய குடியுரிமை இடைநிறுத்தத்தை நீக்கவில்லை என்பதை அந்த கடிதத்தில் ரஞ்சன் ராமநாயக்க சுட்டிக் காட்டி இருக்கின்றார் என்று தெரிகின்றது.

ரஞ்சன் ராமநாயக்காவின் இந்த கடிதத்தின் வாசகங்களே இப்போதைய அவருக்கு எதிரான வழக்கில் அவரது ஒப்புதலாக பயன்படுத்தக்கூடிய ஆபத்து உண்டு.

ஆயினும் ஒரு தேர்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் சமயத்தில் இடையில் தலையிட்டு ஒரு வேட்பாளருடைய பங்களிப்பை நீதிமன்றம் நிறுத்துமா என்பது கேள்வி.

மேலும் இன்னும் மூன்று வாரங்களுக்குள் வாக்களிப்பு நடக்க இருக்கையில் அதற்கிடையில் இந்த வழக்கை உயர் நீதிமன்றம் விசாரித்து ஒரு உத்தரவை வழங்குவதற்கான வாய்ப்புகள் உண்டா என்ற கேள்வியும் எழுகிறது.

இந்தப் பின்புலத்தில் தேர்தல் முடிந்த பின்னரும் இந்த வழக்கு இழுபடக்கூடும்.

ஆயினும் ரஞ்சன் ராமநாயக்காவின் பெயரை முன்னிறுத்தி பெறப்படும் விருப்புவாக்கை அவரது கட்சியின் அடுத்தவர் கூட பயன்படுத்த உயர் நீதிமன்றம் அனுமதிக்குமா என்ற கேள்வியும் இவ்விடயத்தில் எழுகிறது. வழக்காளி சுட்டிக் காட்டுவது போல குடியுரிமை இழந்தவர் தலைமை வேட்பாளராக இருந்து பெற்ற வாக்குகளின் அடிப்படையில் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்திற்கு அவர் தவிர்த்து அடுத்தவர்களை நீதிமன்றம் அனுமதிக்குமா என்பதையும் இந்த வழக்கின் போக்கில்தான் நாம் பார்க்க வேண்டும்.

எது, எப்படியாயினும் இந்த வழக்கு ரஞ்சன் ராமநாயக்கவுக்கும் அவரது கட்சிக்கும் சட்ட, அரசியல் நெருக்கடிகளை தரக்கூடும் என்பதுதான் இப்போதைய நிலைமை.

# விஜய்யின் த.வெ.க. கட்சி முதல் மாநில மாநாடு இன்று





நடிகர் விஜய் துவங்கியுள்ள தமிழக வெற்றிக் கழகம் கட்சி, எதிர்வரும் 2026 சட்டசபை தேர்தலை இலக்காக கொண்டு பணியாற்றி வருகிறது. இதன் முதல்படியாக விக்கிரவாண்டி அருகே வி.சாலையில் விஜய் கட்சியின் முதல் மாநில மாநாடு இன்று நடைபெறுகின்றது.

இந்த மாநாட்டுக்காக ஒகஸ்ட் 28 ஆம் திகதி த.வெ.க. பொது செயலாளர் புஸ்ஸி ஆனந்த் விழுப்புரம் மாவட்ட காவல் அலுவலகத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திருமாலிடம் அனுமதி வேண்டி மனு அளித்தார்.

இதனைத் தொடர்ந்து செப்டம்பர் 2 ஆம் திகதி 21 கேள்விகள் கேட்டு விழுப்புரம் மாவட்ட காவல் துறை புஸ்ஸி ஆனந்துக்கு கடிதம் அனுப்பியது. இதற்கு த.வெ.க. சார்பில் பதில் அளிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து 33 நிபந்தனைகளில் 17 நிபந்தனைகளை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பொலிஸ் மாநாடு நடத்த அனுமதி அளித்தது. இதையேற்று ஒக்டோபர் 27 ஆம் திகதி மாநாடு நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது.

கடந்த 4 ஆம் திகதி அதிகாலை விக்கிரவாண்டியில் தமிழக வெற்றிக் கழக மாநாட்டு பணிக்காக பந்தல் கால் நடப்பட்டது. 85 ஏக்கர் பரப்பளவில் மாநாட்டுக்கான பணிகள் நிறைவு பெற்றுள்ளது. மாநாட்டுக்காக 60 அடி அகலம், 170 அடி நீளத்துக்கு மேற்கூரையுடன் மேடை அமைக்கப்பட்டுள்ளது. மேடையில் இருந்து 800 மீட்டர் தொலைவுக்கு விஜய் நடந்து சென்று ரசிகர்களை சந்திக்கும் வகையில் ரேம்ப் அமைக்கப்பட்டுள்ளது.

மாநாட்டு மேடைக்கு இடதுபுறம் சட்டமேதை அம்பேத்கர், தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர், விஜய் மற்றும் சுதந்திரப் போராட்ட வீராங்கனைகளான வேலு நாச்சியார், அஞ்சலையம்மாள் ஆகியோரின் கட் அவுட்கள் வைக்கப்பட்டுள்ளன. மாநாட்டு மேடைக்கு வலது புறம் தமிழன்னை, சேர, சோழ, பாண்டியர் மன்னர்கள் மற்றும் விஜய் கட் அவுட்கள் வைக்கப்பட்டுள்ளது.

மாநாட்டு மேடையில். 'வெற்றிக் கொள்கை திருவிழா' என்ற வாசகம் இடம் பெற்றுள்ளது. மாநாட்டு முகப்பு கோட்டை மதில் சுவர் போல் வடிவமைக்கப்பட்டு. அதன் மீது தமிழ்நாடு சட்டமன்றம் வடிவில் முகப்பு அமைக்கப்பட்டுள்ளது. தொண்டர்கள் அமர 40 கெபின்கள் அமைக்கப்பட்டு, பொலிஸாரிடம் அனுமதி பெற்ற வகையில் 55 ஆயிரம் இருக்கைகள் போடப்பட்டுள்ளது.

தொண்டர்கள் மாநாட்டை சிரமமின்றி பார்க்கும் வகையில் மாநாட்டு பந்தலுக்கு உள்ளேயும் தேசிய நெடுஞ்சாலை வரையிலும் 40 எல்.இ.டி. திரைகள் அமைக்கப்பட்டுள்ளன. விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, வேலூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து 4 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மாநாட்டுக்கு வரும் தொண்டர்களுக்கு வழங்குவதற்காக 5 லட்சம் தண்ணீர் போத்தகள் மற்றும் 1 லட்சம் பிஸ்கட் பாக்கெட்டுகள் தயாராக வைக்கப்பட்டுள்ளன. மாநாட்டு திடல் வளாகத்தில் 300 மொபைல் கழிவறைகள் மற்றும் 700 குடிநீர் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. மாநாட்டுக்கு வரும் வாகனங்கள் நிறுத்துவதற்காக 5 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு அந்த இடங்களில் மின்விளக்கு மற்றும் மருத்துவ குழுவினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இன்று நண்பகல் 12 மணி முதல் 2 மணிக்குள் தொண்டர்கள் மாநாட்டுத் திடலை அடையவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட வாரியாக கெபின்கள் பிரிக்கப்பட்டுள்ளது. தொண்டர்கள் அந்தந்த மாவட்டத்துக்கென ஒதுக்கப்பட்ட கேபினில் அமர அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாநாடு நிகழ்வுகள் அனைத்தும் உடனுக்குடன் சமூக வலைதளங்களில் பகிரும் வகையில் தடையில்லா இணைய தள வசதியை ஏற்படுத்த தற்காலிகமாக மொபைல் டவர் அமைக்கப்பட்டுள்ளன. 100 அடி உயரமுள்ள கொடி கம்பத்தில் ரிமோட் மூலம் கட்சித் தலைவர் விஜய் கட்சிக் கொடியை ஏற்றிவைத்துப் பேச உள்ளார். மாநாட்டை இரவு 9 மணிக்குள் முடிக்கும் படி திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# 25 விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல்




இந்திய விமான நிறுவனங்களின் 25 இற்கும் மேற்பட்ட விமானங்களுக்கு நேற்று முன்தினம் வெடிகுண்டு மிரட்டல் வந்ததால், டெல்லி, மும்பை உள்ளிட்ட விமான நிலையங்களில் பரபரப்பான நிலை காணப்பட்டது.

இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு சென்றுவரும் விமானங்கள், உள்நாட்டில் இயக்கப்படும் விமானங்களுக்கு சமீபகாலமாக தொடர்ந்து குண்டு மிரட்டல் விடுக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், கடந்த 12 நாள்களில் மட்டும் இந்திய விமான நிறுவனங்களின் 275 இற்கும் மேற்பட்ட விமானங்களுக்கு குண்டு மிரட்டல் வந்துள்ளது.

இதனால் விமானங்கள் அவசர தரையிறக்கம், பயணநேர மாற்றம், கால தாமதம் போன்ற நடவடிக்கைகளால் பயணிகள் தொடர்ந்து சிரமத்துக்கு ஆளாகின்றனர். இதுமட்டுமின்றி, அவசரமாக தரையிறக்கப்படும் விமான நிலையங்களுக்கான கட்டணம், பயணிகளுக்கான இழப்பீடு என ஒவ்வொரு முறையும் 3 கோடி ரூபா வரை இழப்பு ஏற்படுகிறது.

பெரும்பாலும் சமூக வலைதளங்கள் மூலமாகவே இந்த மிரட்டல்கள் வந்துள்ளன. இதையடுத்து, குண்டு மிரட்டல் தொடர்பான தரவுகளை பகிர்ந்துகொள்ளுமாறு மெட்டா, எக்ஸ் உள்ளிட்ட வலைதள நிறுவனங்களை மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது. புரளி கிளப்பும் நபர்களை கண்டுபிடிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சைபர் கிரைம் பொலிஸார் இதுதொடர்பாக தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.



# ஈரானில் தாக்குதல் 10 பொலிஸார் பலி

ஈரானின் தென்கிழக்கு பகுதியில் உள்ள தஃப்டானில் பயங்கரவாதிகளுடனான மோதலில் 10 எல்லைபொலிஸார் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

சில மணி நேரங்களுக்கு முன்பு, சிஸ்தான் மற்றும் பலு-செஸ்தான் மாகாணத்தில் உள்ள கோஹர்கோ, தஃப்தான் நகரத்தில் எல்லை ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது ஆயுதக் கும்பல்கள் தாக்கியதில் 10 எல்லைப் பொலிஸார் உயிரிழந்தனர்.

சிஸ்தான் மற்றும் பலுசிஸ்தான் பொலிஸ் தகவல் மையம் நேற்று வெளியிட்ட அறிக்கையில், இது தெரியவந்துள்ளது.

தாக்குதல் சம்பவத்தின் பின்னணியை விசாரிக்க ஈரான் உள்துறை அமைச்சர் ஒரு குழுவை நியமித்துள்ளார்.

தஃப்தான் நகரம் சிஸ்தான் மற்றும் பலுசிஸ்தான் மாகாணத்தின் நகரங்களில் ஒன்றாகும், இது நூக்காபாத் நகரத்தை மையமாகக் கொண்டுள்ளது.









# ஹமாஸ் தளபதி இஸ்லாம் ஜமீல் ஓடே கொல்லப்பட்டார்; இஸ்ரேல் அறிவிப்பு

ஈரான் – இஸ்ரேல் மோதல் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், மேற்கு கரையில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஹமாஸ் தளபதி இஸ்லாம் ஜமீல் ஓடே கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேல் இராணுவ படை அறிவித்துள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் மேற்கு விளிம்பில் உள்ள துல்கரேமில், உளவுத்துறை அடிப்படையிலான பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையை நடத்திய போது அவர் கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், பலஸ்தீன சுகாதார அமைச்சகம் அந்த நபரை 29 வயதான இஸ்லாம் ஜமீல் ஓடே என அடையாளம் கண்டுள்ளது.

பலஸ்தீனிய செய்தி நிறுவனமான வஃபாவின் கூற்றுப்படி, இஸ்ரேலியப் படைகள் அதிகாலையில் துல்கரேமின் அல்–சலாம் பகுதியில் உள்ள குடியிருப்பு கட்டடத்தை சுற்றி வளைத்துள்ளன.

அதன் போது, தொடர்ச்சியான துப்பாக்கிச்சூடு மற்றும் 20 இற்கும் மேற்பட்ட வெடிகுண்டு குண்டுகளுடன் ஒரு அடுக்குமாடி குடியிருப்பை குறிவைத்து தாக்குதல் நடத்தியதில் அவர் கொல்லப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஒக்டோபர் 03 இஸ்ரேலிய வான்வழித் தாக்குதலில் ஹாமஸ் தளபதி ஜாஹி ஓஃபி கொல்லப்பட்டதை தொடர்ந்து, துல்கரேமில் ஹமாஸ் தாக்குதல்களுக்கு ஜமீல் ஓடே தலைமை தாங்கியுள்ளார் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.











# பருத்தித்துறையில் கைக்குண்டுகள் மீட்பு!

(எஸ்.நிதர்ஷன்)

போர் காரணமாக பாவனையின்றி காணப்பட்ட காணியின் கிணற்றில் இருந்து அதிகளவான கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

யாழ். பருத்தித்துறை துறைமுகத்தை அண்டிய எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குப் பின்புறமாக இருந்த குறித்த காணியின் பாவனையற்ற கிணற்றைத் துப்பரவு செய்யும்போது இந்தக் கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று சனிக்கிழமை காலை இந்தக் கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

போர் காரணமாக 35 வருடங்களாகப் பாவனையற்றிருந்த காணியில் இருந்த கிணற்றைத் துப்பரவு செய்யும்போதே இந்தக் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

# ஊழல், மோசடிகள் தொடர்பிலான விசாரணைகள் மீண்டும் ஆரம்பம்




நாட்டில் ஊழல், மோசடி மேற்கொண்ட தரப்பினர் தொடர்பில் நிறுத்தப்பட்டிருந்த விசாரணைகள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என தேசிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட வேட்பாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பாணந்துறை – திக்கல்ல பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் வைத்து அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இன்னும் பெரிய திருடர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஊழலுக்கு எதிரான ஆணைக்குழு, பொலிஸ் குற்றப் புலனாய்வு திணைக்களம், ஆகியவற்றால் நிறுத்தப்பட்ட விசாரணைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சட்டமா அதிபர் திணைக்களத்தினால் நிறுத்தப்பட்ட இடத்திலிருந்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் முக்கியமான வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.” – என்றார்.





# ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கம் பிரதமர் ஹறிணியுடன் சந்திப்பு

பிரதமர் கலாநிதி ஹறிணி அமர சூரியவுக்கும் ஆசிரியர் அதிபர் தொழிற்சங்கக் கூட்டமைப்புக்கும் இடையே நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு பிரதமர் காரியாலயத்தில் இடம்பெற்றது.

இதன்போது தங்களது தொழிற் துறையில் நிலவும் பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் கலந்துரையாடப் பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.





# வவுனியாவில் பல இடங்களில் முன்னணியினர் தீவிர பரப்புரை









**(கி.வசந்தன்)**

வவுனியா மாவட்டத்தின் பல இடங்களில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தீவிர பிரச்சார நடவடிக்கைகளை நேற்று முன்னெடுத்திருந்தனர்.

வன்னித் தேர்தல் தொகுதியின் முதன்மை வேட்பாளர் தவபாலன் தலைமையில் இந்தப் பிரச்சாரக் கூட்டங்கள் இடம்பெற்றன.

இதன்போது மக்கள் தமது தேவைகள் தொடர்பாகத் தெரியப்படுத்தியதுடன், தமிழ்த் தேசியத்தின் இருப்பு தொடர்பாகவும், தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கூட்டங்களில் அதிகளவிலான மக்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.



# பழங்களின் விலை வீழ்ச்சி அடைந்தது

பேலியகொட மெனிங் சந்தையில் பழங்களின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகச் சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பழங்களை வாங்க வாடிக்கையாளர்கள் பெரும்பாலும் வணிக வளாகத்திற்குச் செல்கின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, பழங்களின் மொத்த விற்பனை விலை, ஒரு கிலோ சர்க்கரை வாழைப்பழம் 100-120 ரூபா, கோலிக்கூடு வாழைப்பழம் கிலோ 200 ரூபா, புளி வாழைப்பழம் கிலோ 220 ரூபாவிற்கும், விளாம்பழம் கிலோ 100 ரூபாவிற்கும் விற்பனையாகிறது.

மேலும், தர்பூசணி கிலோ 100 ரூபா விற்கும், அன்னாசிப்பழம் கிலோ 450 ரூபா விற்கும், அல்போன்சா மாம்பழம் கிலோ 1200 ரூபாவிற்கும், பப்பாளி கிலோ 120 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் தேர்தல் அலுவலகம் திறப்பு

**(பிரபாகரன் டிலக்சன்)**

ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் தேர்தல் அலுவலகம் யாழ்ப்பாணம், அரியாலை - மணியந்தோட்டம் பகுதியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் ஞானப்பிரகாசம் சுலக்சன் அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

இதன்போது சக வேட்பாளர்களான சுதர்சிங் விஜய்காந்த், நியூட்டன் எட்வேட், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மூக்குக் கண்ணாடிச் சின்னத்தில் ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.






# தேசிய பாதுகாப்புக்கு மீண்டும் அச்சுறுத்தல்

## சஜித் பிரேமதாஸ கூறுகின்றார்

தேசியப் பாதுகாப்புக்கு இன்று மீண்டும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மஹரகம பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பொருள்களின் விலை அதிகரித்துள்ளதால், தேங்காய் வாங்குவதற்குக் கூட மக்கள் வரிசையில் நிற்க வேண்டியுள்ளது.

இந்த நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதால் சுற்றுலாத் துறைக்கு ஆபத்து நேர்ந்துள்ளது.

இது அந்நியச் செலாவணியைத் தரும் ஒன்றாக இருப்பதால், அது பாதிக்கப்படக் கூடாது.

அதேநேரம், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பலமாக விளங்கும் நுண், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கும் கூட இது பாதிப்பாக உள்ளது.

ஜனாதிபதி தேர்தலின் போது தற்போதைய ஜனாதிபதி வரிச்சுமையைக் குறைப்பதாக உறுதியளித்தார்.

எனினும், சர்வதேச நாணய நிதியத்துடன்கலந்துரையாடியபோதிலும்,அரசாங்கத்தால் வரிச்சுமையைக் குறைக்கவும், வரி சூத்திரத்தில் மாற்றங்களை ஏற்படுத்தவும் முடியவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்பாடு இல்லாமல் வரி சூத்திரத்தை மாற்ற முடியாது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னர், வரி சூத்திரத்தை மாற்றும் நடவடிக்கை தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் பலசுற்று பேச்சுவார்த்தைகளை ஐக்கிய மக்கள் சக்தி மேற்கொண்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றதன் பின்னர் வரிச்சுமையைக் குறைக்க எதிர்பார்த்தோம். எனினும், மக்கள் எமக்கு அதிகாரத்தை வழங்கவில்லை.

எனவே இந்த பொதுத் தேர்தலில் நாடாளுமன்றப் பெரும்பான்மை கிடைத்தால் வரிச்சுமையைக் குறைத்து, மக்கள் மீதான அழுத்தத்தைக் குறைக்கும் வகையில் சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை திருத்தப்படும்.”– என்றார்.















# வடக்கு மார்க்கத்திலான ரயில் சேவை வழமைக்கு




வடக்கு மார்க்கத்திலான ரயில் சேவை, நாளை முதல் வழமைக்குத் திரும்பவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கொழும்பு கோட்டைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான யாழ்.தேவி ரயில் சேவை, நாளை திங்கள் கிழமை முதல் ஆரம்பமாகும் என அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், அனுராதபுரத்துக்கும் பெலியத்தவுக்கும் இடையிலான ரஜரட்ட ரெஜின ரயில் சேவையும் நாளை முதல் ஆரம்பிக்கப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.



# தேங்காயின் விலை சடுதியாக அதிகரிப்பு

சந்தையில் தேங்காயின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

சந்தையில் தற்போது 130 முதல் 180 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் தேங்காய் விற்பனை செய்யப்படுகிறது.

இதன் காரணமாக தாங்கள் கடும் இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான பின்னணியில் நகரை அண்மித்த பகுதிகளில் நிவாரண அடிப்படையில் தேங்காயை விற்பனை செய்வதற்கான நடமாடும் திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளது.

இந்த வேலைத்திட்டம் கடந்த திங்கள் கிழமை முதல் முன்னெடுக்கப்படுகிறது.



# உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் இன்று ஆரம்பம்

பொதுத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் மாவட்டச் செயலாளர் காரியாலயங்கள் ஊடாக தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிரதி அஞ்சல் மா அதிபர் ராஜித ரணசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இன்று முதல் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# களஞ்சியசாலைகளில் இருப்பில் உள்ள நெல் தொகை தொடர்பில் விசேட ஆய்வு

களஞ்சியசாலைகளில் இருப்பில் உள்ள நெல் தொகை தொடர்பில் விசேட ஆய்வு நடத்தப்படுவதாக விவசாய அமைச்சின் செயலாளர் எம்.பி.என்.எம்.விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நெல் சந்தைப்படுத்தல் சபை மற்றும் நுகர்வோர் விவகார அதிகார சபை ஆகியன இணைந்து இந்த ஆய்வை மேற்கொள்கின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் சந்தையில் தொடர்ந்தும் கட்டுப்பாட்டு விலையில் அரிசி கிடைப்பதில்லை என நுகர்வோர் விசனம் வெளியிடுகின்றனர்.



ஜனாதிபதிக்கும் அரிசி வர்த்தகர்களுக்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது கட்டுப்பாட்டு விலையில் அரிசியை வழங்குவதற்கு வர்த்தகர்கள் இணங்கியிருந்தனர்.

இதேவேளை, அரிசியின் விலை தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் மற்றுமொரு கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இதில் விவசாய, வர்த்தக அமைச்சு மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபை என்பவற்றின் அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர்.



# தமிழ்த் தேசிய அரசியலை மக்கள்தான் காக்க வேண்டும்!



புருஜோத்தமன் தங்கமயில்

வடக்குக் கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகள், தென் இலங்கைக் கட்சிகள் மற்றும் அவற்றின் உதிரிக் கட்சிகளிடம் சென்றுவிடுமோ என்கிற அச்சம், தமிழ்த் தேசிய அரசியலைப் பற்றிக் கொண்டிருப்பவர்களிடம் ஏற்பட்டிருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலில் தென் இலங்கையின் பாரம்பரியக் கட்சிகளின் வேட்பாளர்களைத் தோற்கடித்து, தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார திஸநாயக்க வெற்றி பெற்றிருக்கின்றார். அதனை 'புதிய புரட்சி மாற்றம்' என்று அடையாளப்படுத்துகிறார்கள். நடைபெறவுள்ள பொதுத் தேர்தலிலும், அந்த வெற்றியின் நீட்சியை நிகழ்த்திக் காட்ட வேண்டும் என்கிற எதிர்பார்ப்பிலேயே ஜனாதிபதியாகப் பதவியேற்ற ஒருசில நாள்களிலேயே நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்கான அறிவிப்பை அநுர வெளியிட்டார். இந்தப் புரட்சி மாற்ற அலைக்குள் தமிழ் மக்களும் அள்ளுண்டுவிடுவார்கள் என்கிற பயம், தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு மாத்திரமல்ல, கடந்த காலங்களில் ஆட்சியாளர்களின் பங்காளியாக இயங்கிய ஈ.பி.டி.பி., தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் போன்ற கட்சிகளுக்கும் ஏற்பட்டிருக்கின்றன என்பது கவனத்தில் கொள்ளப்படக் கூடியது.

ஈழத் தமிழர் அரசியல் வரலாற்றில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக 2004ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் 22 நாடாளுமன்ற ஆசனங்களை வெற்றி கொண்டமைதான், அதியுச்ச தேர்தல் வெற்றியாகும். அது, தமிழீழ விடுதலைப் புலிகளினால் நிகழ்த்திக் காட்டப்பட்டது. அங்கு, கூட்டமைப்பின் தலைவர்களோ, பங்காளிக் கட்சிகளோ வெற்றிக்கான உரித்தாளர்கள் அல்லத். அவர்கள், புலிகளினால் மக்களிடம் முன்மொழியப்பட்டு, வெற்றியைச் சுவைத்தவர்கள். அத்தோடு, அப்படியான தமிழர் வாக்கு ஒருங்கிணைவு, தற்போதுள்ள தேர்தல் நடைமுறைக்குள் சாத்தியமும் இல்லாதது. அன்றைய திகதியில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 9 நாடாளுமன்ற ஆசனங்கள். இன்று அது, 6 ஆக சுருங்கிவிட்டது. ஆக, 22 என்கிற நாடாளுமன்ற ஆசனத்தை 19 எண்ணிக்கை அடிப்படையில் வைத்துக் கொண்டுதான், தமிழ்த் தேசிய வாக்குகளின் ஒருங்கிணைவின் அடைவு தொடர்பில் பேச வேண்டி ஏற்படுகின்றது. கடந்த பொதுத் தேர்தலில் கூட்டமைப்பினர் 10 ஆசனங்களையும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 2 ஆசனங்களையும், தமிழ் மக்கள் கூட்டணி ஒரு ஆசனத்தையும் பெற்றன. அப்படிப் பார்த்தாலும் 6 ஆசனங்களின் இழப்பு, தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு ஏற்பட்டிருப்பதாக வாதம் முன்வைக்கப்படுகின்றது. கடந்த தேர்தலில் மட்டக்களப்பில் 2 ஆசனங்களை தமிழ்த் தேசியக் கட்சிகள் இழந்தன. அவற்றை பிள்ளையானும், வியாழேந்திரனும் வென்றனர். அம்பாறையில் வெற்றி கொள்ளப்பட வேண்டிய ஒற்றை ஆசனமும் கருணா அம்மானின் வாக்குப் பிரிப்பினால், இல்லாமற்போனது. யாழ்ப்பாணத்தில், அங்கஜன் ஒரு ஆசனத்தை வென்றார். வன்னியில் ஈ.பி.டி.பிக்கு உதிரி வாக்குகளினால் ஓர் ஆசனம் கிடைத்தது. நேரடியாக தமிழ் வாக்குகளின் மூலம், 4 ஆசனங்களை தமிழ்த் தேசியம் பேசாத ராஜபக்ஷகளின் ஆதரவுக் கட்சிகள் வென்றன. ஓர் ஆசனம் அம்பாறையில் நேரடியாக இழக்கப்பட்டது. இந்த ஆசனங்களுக்கான வாக்குகளை தமிழ்த் தேசியக் கட்சிகளை நோக்கித் திருப்பினாலே, நேரடியாக 5 ஆசனங்கள் மற்றும் இன்னொரு தேசியப் பட்டியல் உறுப்புரிமைக்கான வாக்கின் திரட்சி அளவு என்பவற்றைக் கணக்கில் எடுத்தால், தமிழ்த் தேசியக் கட்சிகள் 19 ஆசனங்களை வெற்றி கொள்ள முடியும். இதில், யாழ்ப்பாணத்தில் டக்ளஸ் தேவானந்தாவின் ஆசனம் உள்ளடக்கப்படவில்லை. ஏனெனில், அவர் புலிகளின் அலைக்குள்ளாலும் தப்பி, 2004 தேர்தலில் வென்றவர். ஆக, 22 என்கிற அதியுச்ச வெற்றிக் கணக்கினை தற்போது ஒப்பிட்டால், அது 19 என்று கொள்ளப்பட வேண்டும். அவற்றை மீளவும் வெற்றிகொள்வது என்பது மிகப்பெரிய சாதனை. கிட்டத்தட்ட அந்த இலக்கை தமிழ்த் தேசியக் கட்சிகள் அடைந்தால், அது

தொடர்ச்சி▼

# தமிழ்த் தேசிய அரசியலை மக்கள்தான் காக்க வேண்டும்!

தொடர்ச்சி▲

2004 பொதுத் தேர்தல் வெற்றியைவிட பெரிய வெற்றியென்று கொள்ளப்பட வேண்டியது. அதற்கான காரணங்களை, வெளிப்படையாக பேச வேண்டியதில்லை.

தமிழ்த் தேசியக் கட்சிகள் இழந்திருக்கின்ற ஐந்து ஆறு ஆசனங்களை மீண்டும் கைப் பற்றுவதன் மூலம், தமிழ் மக்களை தமிழ்த் தேசிய வாக்குத் திரட்சிக்குள் வைத்துக் கொள்ள முடியும் என்பது ஒரு வகையிலான தேர்தல் கணக்கு ஒப்பீடு. ஆனால், அது சாத்தியமாக என்றால், நிச்சயமாக இல்லை. ஏனெனில், கட்சிகளை ஓரணியில் திரட்டுவதற்கும், அவர்களை தங்க ளின் கருவிகளாக கையாள்வதற்கும் விடுதலைப் புலிகள் போன்ற ஆளுமையுள்ள தரப்பொன்று தமிழ்ச் சூழலில் இல்லை. அத்தோடு, தமிழ்த் தேசியக் கட்சிகளை அழுத்தங்களை வழங்கி வழிப்படுத்துவதற்கான சிவில் சமூக அமைப்புக்க ளும் இயங்கு நிலையில் இல்லை. அப்படியான வாய்ப்புக்களை தமிழ் சிவில் சமூக அமை யம், தமிழ் மக்கள் பேரவை, தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு என்ற பெயர்களில் எழுந்து அடங்கியவர்கள் அழித்துவிட்டார்கள். இதனால், தேர்தல் மைய அரசியல் கட்சிகளை ஓரணிக் குள் கொண்டு வருவதும், அதன் மூலம் தமிழ்த் தேசிய வாக்குகளை திரட்டி பெரிய வெற்றி யைப் பெறுவதும் சாத்தியமில்லாதது. தற்போது ஒவ்வொரு கட்சியும் தங்களின் தனித்த வெற்றி தொடர்பில்தான் அக்கறையோடு இருக்கின்றன. யார் அதிக ஆசனங்களை வெற்றி கொள்கி றார்களோ, அவர்கள்தான், தமிழ்த் தேசிய அரசி யலின் தலைமைக் கட்சி என்கிற நிலையில் இருப்பார்கள். அப்படியான நிலையில், அந்த இடத்தைத் தக்க வைப்பது தொடர்பில் தமிழரசுக் கட்சியும், அந்த இடத்தை அடைவது தொடர்பில் ஏனைய கட்சிகளும் இயங்கும். கடந்த பொதுத் தேர்தலில் கூட்டமைப்பு வென்ற 10 ஆசனங்க ளில், 4 ஆசனங்களை ரெலோவும், புளொட் டும் வென்றிருந்தன. அதனைக் கொண்டே தங்களை அதிகளவில் அலைக்கழித்துவிட் டார்கள் என்று தமிழரசுக் கட்சியினர் எரிச்ச லோடு இருந்தார்கள். தங்களின் வீட்டுச் சின்னத் தில் நின்று வெற்றியைப் பெற்றுவிட்டு, தங்க ளுக்கே பிரச்சினைகளைக் கொடுக்கிறார்கள் என்ற கோபத்தில்தான், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் தீர்மானத்தை எடுத்தார்கள். அது, இந்தப் பொதுத் தேர்தல் வரையில் வந்து நிற்கின்றது. அப்படியான நிலையில், தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசிய ஒருங்கிணைவு என்பது பற்றிப் பேசினாலும், அது தன்னுடைய தலைமையின் கீழ் நடைபெற வேண்டும் என்று எதிர்பார்க்கின்றது. அங்கு, தங்களைக் கேள்விக்குட்படுத்தாதவர்களாக பங்காளிக் கட்சிகள் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு பிரதானமாக தொக்கி நிற்கின்றது.

ஒரு பேச்சுக்கு தமிழரசின் தலைமையின் கீழ், ஏனைய கட்சிகள் இணைந்தாலும் முன் னணி அடையாளத்துக்குள் இருக்கும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் இணைவதற்கான எந்த வாய்ப்புக்களும் இல்லை. அந்தக் கட்சி, அவ்வாறான பேச்சுவார்த்தைகளுக்கான கதவு களை இறுகச் சாத்திக் கொண்டுதான், அரசி யலே செய்கின்றது. அத்தோடு, அதற்கு வடக்குக் கிழக்குப் பூராவும் கட்சியை வளர்க்க வேண்டும் என்பதோ, வெற்றிபெற வேண்டும் என்பதோ நோக்கமும் இல்லை. அதிகபட்சம் யாழ்ப்பாணத் தில் இரண்டு ஆசனங்களை வென்று, பெரி தாக பொறுப்புக் கூறாத நிலையில், எதிர்க்கட்சி வரிசையில் இருந்தால் போதும் என்பதுதான் அந்தக் கட்சியின் அக நிலைப்பாடு. அதற்கு, அந்தக் கட்சி தொடர்ச்சியாக ஒரு குடும்பத்தின் கீழ் இருப்பதும் காரணாகும். கட்சியை வடக்குக் கிழக்குப் பூராவும் கட்டமைப்புக்களை பலப்படுத்தி வளர்த்து, அதிக வெற்றியைப் பெற்றால், அது எதிர்காலத்தில் கட்சி மீதான கட்டுப்பாட்டினை பொன்னம்பலம் குடும்பத்திடம் இருந்து பறித்துக் கொண்டுவிடும் என்கிற எச்சரிக்கை உணர்வு அவர்களோடு தொடர்ந்து வருகின்றது. அத னால், அவர்கள் யாழ்ப்பாணத்துக்குள் சுருங் கிக் கொண்டுவிட்டார்கள். கட்சியை உண்மை யிலேயே வளர்க்கும் நோக்கம் இருக்குமானால், கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் கிழக்கில் பிரச்சாரங்களை முன்னெடுத்த காங்கிரஸ், தங்களுக்கு தேசியப் பட்டியல் ஆசனம் கிடைத் தால் அதனை கிழக்கிற்கு வழங்குவோம் என்று அறிவித்தது. ஆனால், அந்த வாக்குறு தியை அவர்கள் நிறைவேற்றவில்லை. மாறாக, யாழ்ப்பாணத்துக்குள் அதனை வைத் துக் கொண்டார்கள். இன்றைக்கு அவர்கள் வடக்கு கிழக்குப் பூராவும் போட்டியிட்டாலும், அதன் நோக்கம் நேரடியாக வெற்றிபெறுவது அல்ல. மாறாக, தேசியப் பட்டியலுக்கான வாக்குத் திரட்டுதலாகும். கடந்த பொதுத் தேர்தலில் கூட்ட மைப்புக்குள் வேட்பாளர்களுக்கு இடையில் சொல்லிக் கொள்ள முடியாதளவுக்கு குழிபறிக்கும் வேலைகள் இடம்பெற்றன. அது, கூட்டமைப் பின் தோல்விகளுக்கான பிரதான காரணமாக மாறியது. அதுபோலவே, ஓரிரு ஆசனங்களை வெற்றிபெறும் களம் தங்களுக்கு வாய்த்திருக் கின்றது என்பதை உணர்ந்த காங்கிரஸ் காரர்களுக்குள்ளும் விருப்பு வாக்குப் போட்டியும் குழிபறிப்புக்களும் அரங்கேறின. மணிவண்ணன் அதிக வாக்குகளைப் பெற்றுவிடக்கூடாது என்ப தில் கஜன்களும், கஜன்களைத் தாண்டி அதிக வாக்குகளைப் பெற்றுவிட வேண்டும் என்பதில் மணிவண்ணனும் குறியாக இருந்தார்கள். இரு தரப்பும், மற்றத்தரப்புக்கு வாக்குப்போட வேண் டாம் என்ற பிரச்சாரத்தை வெளிப்படையா கவே செய்தார்கள். அதன் தொடர்ச்சியாகத்தான் மணிவண்ணனை முன்னணியில் இருந்து விரட்டினார்கள்.

இன்றைக்கு வடக்குக் கிழக்கு பூராவும் தமி ழரசுக் கட்சி தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிர தான கட்சியாக களம் காண்கிறது. யாழ்ப்பாணத் தில் ஓரிரு ஆசனங்களுக்காக காங்கிரஸும் போட்டியில் இருக்கின்றது. ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினரான சங்குக் கூட்டணி

தொடர்ச்சி▼

# தமிழ்த் தேசிய அரசியலை மக்கள்தான் காக்க வேண்டும்!

தொடர்ச்சி▲

யாழ்ப்பாணத்தில் ஒன்று, வன்னியில் ஒன்று என்ற ஆசன இலக்குகளோடு களம் கண்டிருக்கின்றது. அவர்களினால் ஏனைய மாவட்டங்களில் பெரிய வெற்றியைப் பெற முடியாது. வேணுமென்றால், ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்துக்கான வாக்குத் திரட்சியை அவர்கள் குறி வைக்கலாம். அதன்மூலம், அதிக பட்சம் சங்குக் கூட்டணி, மூன்று ஆசனக் கணக்கோடு இருக்கின்றது. ஒப்பிடுகையில், கடந்த தேர்தலில் நான்கு ஆசனங்களைக் கொண்டிருந்தார்கள். இப்போது, அவற்றில் ஒன்று தமிழரசுக் கட்சியிடம் இழக்கப்படும் வாய்ப்புண்டு. தமிழரசுக் கட்சியினர் அலங்கரித்து அழகுபார்த்து விக்னேஸ்வரனை வடக்கு முதலமைச்சர் பதவியில் இருத்தினார்கள். அவரோ, தன்னுடைய தனிப்பட்ட ஓட்டத்துக்காக பேரவையைக் கொண்டு தனிக் கட்சி ஆரம்பித்து, கடந்த தேர்தலில் வென்று பதவியை அனுபவித்தும் விட்டார். இறுதியில் அவர், சாராயக்கடை அனுமதிப்பத்திரத்தை வாங்கிக் கொடுத்து, தமிழ்த் தேசிய அரசியலின் சீரழிவு முகங்களின் ஒன்றாக மாறினார். இப்போது, அவரின் கட்சியில் மணிவண்ணன் அணியினர் போட்டியிடுகிறார்கள். அவர்களோடு, தமிழரசுக் கட்சியில் ஆசனம் கோரி, மறுக்கப்பட்ட இருவர் இணைந்திருக்கிறார்கள். இந்தக் குழுவினரால், தேர்தல் வெற்றியை நோக்கி பெரிதாக ஓட முடியாது. ஏனெனில், அவர்கள் தேர்தல் பிரச்சாரக் களத்தில், விக்னேஸ்வரன் சாராயக்கடை முகவராக செயற்பட்ட அவதூறுக்கு பதில் சொல்வதிலேயே காலத்தைக் கடத்த வேண்டியிருக்கின்றது. இன்னொரு பக்கம், தமிழரசுக் கட்சியில் வாய்ப்பு மறுக்கப்பட்டவர்கள் சிலர் ஒன்றாக இணைந்து சுயேச்சையாக மாங்காய் சின்னத்தில் போட்டியிடுகிறார்கள். அவர்களினால் சில ஆயிரம் வாக்குகளை பெறுவதே பெரிய காரியமாக இருக்கும். அப்படியான நிலையில், ஆசனங்களை வெற்றிகொள்வதெல்லாம் நினைத்துப் பார்க்க முடியாது. அதனால்தான், அவர்கள் ஊடகங்களில் செவ்விகளின் வழியாக மாத்திரம் அரசியல் செய்கிறார்கள். அதிலும், சுமந்திரனை தாக்குவது மாத்திரம்தான் தமிழ்த் தேசிய அரசியல் என்றும் நினைத்துக் கொண்டு இயங்குகிறார்கள்.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் இந்த குளறுபடி நிலைக்குள் நின்றுகொண்டு, சில ஆசனங்களை வென்றுவிட வேண்டும் என்பதில் தேசிய மக்கள் சக்தி குறியாக இருக்கின்றது. அத்தோடு, கிழக்கில் அந்தக் கட்சி திருகோணமலை, அம்பாறையில் பெரிய வெற்றியையும் பெறும். அங்கு, அதற்கான வாய்ப்புக்களை சிங்கள, முஸ்லிம் மக்கள் வழங்கும் சாத்தியம் காணப்படுகின்றது. அப்படியான நிலையில், அந்த மாவட்டத்து தமிழ் மக்கள் புரட்சி மாற்றத்துக்கு வாக்களிக்கப் போகிறோம் என்று தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிப்பது, அந்த மாவட்டங்களின் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இழக்கப் பண்ணுவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்யும். குறித்த இரு மாவட்டங்களிலும் தேசிய மக்கள் சக்தியில் நின்று, விருப்பு வாக்கு அடிப்படையில் தமிழ் வேட்பாளர் ஒருவர் வெற்றி பெறுவது என்பது குதிரைக் கொம்பு போன்றது. அப்படியான சூழலில், களத்தினையும் தேவையையும் உணர்ந்து வாக்களிக்க வேண்டும்.

வடக்கில், தேசிய மக்கள் சக்தியினால் ஆசனங்களை வெற்றிகொள்வதற்கான வாய்ப்புக்கள் இல்லை. அந்தக் கட்சியிடம் அது தொடர்பிலான எதிர்பார்ப்பு அவசரமாக இருப்பது மாதிரியும் தெரியவில்லை. ஏனெனில், அந்தக் கட்சியின் வேட்பாளர் தெரிவுகளே அதனை வெளிப்படுத்துகின்றன. தேசிய மக்கள் சக்தியில் வேட்பாளராக வேண்டும் என்பது தொடர்பில் யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் பிரபலமான கல்வியாளர்கள் தொடங்கி பலரும் முண்டியடித்தார்கள். ஆனால் அவர்களையெல்லாம் தவிர்த்துவிட்ட ஒப்பீட்டளவில் வெற்றிக்கான முகமாக அடையாளம்பெற முடியாதவர்களை அந்தக் கட்சி தெரிவு செய்திருக்கின்றது. அது, தனித்த ஆளுமைகளினால் அல்லாமல், கட்சி அடையாளத்தோடு வெற்றிபெற வேண்டும் என்பதும், அதுதான் எதிர்கால கட்சி வளர்ச்சிக்கு அவசியம் என்றும் அந்தக் கட்சியின் நிறைவேற்றுக்குழு நினைக்கின்றது. அதனை நோக்கிய தெரிவுதான் வடக்கில் அந்தக் கட்சி செய்திருப்பது. கிட்டத்தட்ட அதனைத்தான் மட்டக்களப்பிலும் அந்தக் கட்சியின் வேட்பாளர் தெரிவு வெளிப்படுத்தியிருக்கின்றது. எங்கெல்லாம் தமிழ் வாக்குகள் வெற்றியைத் தீர்மானிக்கும் என்று தோன்றிய இடங்களில், அதனை ஒரு நிலைப்பாடாகவே அந்தக் கட்சி கடைப்பிடித்திருக்கின்றது. இந்தப் பிரதேசங்களில் தேசிய மக்கள் சக்திக்கு விழும் வாக்குகள், இன்றைய வெற்றிகளுக்கானது அல்ல. எதிர்கால நிலைத்த வெற்றிகளுக்கான அடித்தளம். அதனை, புரட்சி மாற்ற அலைக்குள் அல்லாட நினைக்கும் தரப்பினர் உணர்ந்து கொள்ள வேண்டும். ஏனெனில், தேசிய மக்கள் சக்தி என்பது, மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தேர்தலுக்கான புதிய முகம். அந்த முகத்துக்குப் பின்னால், இருப்பது கடும்தேசியவாதமும், தமிழர் விரோதமும் கட்டவிழ்த்துவிட்ட கடந்த காலங்களும். அதனைத் தாண்டிய புதிய புரட்சிகளை, வரலாற்றை, அதிகாரப் பகிர்வினை அந்தக் கட்சி செய்துவிடும் என்ற நம்பிக்கை கொள்வது தேவையில்லாதது. ஆக, தமிழ் மக்கள், தங்களின் அரசியலைத் தக்க வைத்துக் கொள்வதற்காக தமிழ்த் தேசியக் கட்சிகளை நோக்கி திரள்வதுதான் இருப்பதில் புத்திசாலித்தனமாக தெரிவு. தமிழ்த் தேசியக் கட்சிகள் பொறுப்பற்றுச் செயற்பட்டாலும், தமிழ்த் தேசிய அரசியலை விடுதலைக்கான மூச்சாக கொண்டு சுமப்பதற்கான பொறுப்புணர்வின் அடிப்படையைக் கருதி, தமிழ் மக்கள் அந்த முடிவின் பக்கம் நிற்க வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.10.2024




இன்று உங்கள் பொறுமையை சோதிக்கும் கடினமான சூழ்நிலை காணப்படும். அதனால் நீங்கள் சில சௌகரியங்களை இழக்க நேரும். நீங்கள் சாதகமான பலன்களைக் காண பொறுமை மற்றும் நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று அதிகப் படியான பணிகள் காணப்படும். நீங்கள் பணிகளை ஒழுங்குபடுத்தி அதன்படி திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். கவனமற்ற வார்த்தைகளால் உறவு பாதிக்கும். உறவில் மகிழ்ச்சி நிலவ இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். தோள் வழிப் பிரச்சினைக்கு ஆளாகலாம்.




இன்று நன்மையான பலன்கள் கிடைக்கும். வாழ்வின் நன்மை தீமை உணர்வதற்கான அனுபவ அறிவை உணரும் நாள். நற்பலனகளைக் காண சுமூகமான உறவை பராமரிப்பது நல்லது.

பணியிடத்தில் சவால்கள் நிறைந்திருக்கும். என்றாலும் நீங்கள் இதனை சமாளித்து நற்பெயர் பெறுவீர்கள். வளர்ச்சி காண நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

உங்கள் துணையை புரிந்து கொள்வதன் மூலம் இனிமையான வார்த்தைகளை பேச இயலும். நீங்கள் உங்கள் துணையிடம் அனுசரித்து நடந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் ஆரோக்கியமாக ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்களிடம் இன்று ஆற்றலும் உற்சாகமும் நிறைந்திருக்கும். அதனால் உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இன்று அனைத்து விதத்திலும் வெற்றி கிடைக்கும் நாள்.

இன்று புதிய வாய்ப்புகள் கிடைக்கும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகமாக இருப்பீர்கள். நீங்கள் உங்கள் பணிகளை விரும்பி மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு ஒன்றாகச் சென்று மகிழ்வீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். சீரான பணப்புழக்கம் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் முழு முயற்சி எடுக்க வேண்டும். விரைவாக செயலாற்றுவதை தவிர்ப்பதன் மூலம் பாதகமான சூழ்நிலையை தவிர்க்கலாம்.ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் அன்றாட பணிகளை கவனமுடன் கையாள வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். ஆரோக்கியமான உறவை பாரமாரிக்க இத்தகைய பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும்.

நிதியில் ஏற்ற இறக்கங்கள் உங்களுக்கு கவலை அளிக்கும். குறைவான பணப்புழக்கம் காரணமாக நீங்கள் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று விருப்பமான பலன்களை அடைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். இன்று உங்கள் செயல்களில் திருப்தி காண்பீர்கள். மந்திர ஜெபம் மற்றும் பிரார்தனை மூலம் நீங்கள் மன ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் நீங்கள் சிறந்த பலனைக் காண முறையாக திட்டமிட வேண்டும். அனுசரித்துப் போவதன் மூலம் பலன் பெறலாம்.

இனம் தெரியாத காரணத்தினால் உங்கள் துணையிடம் எரிச்சலடைய வாய்ப்பு உள்ளது. இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும். உறவில் மகிழ்ச்சி நிலவ உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்.

உங்கள் செலவுப் பழக்கத்தில் கவனம் தேவை. சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். இன்று செலவுகள் அதிகரித்து காணப்படும்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். அதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பது இன்று உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் பணியில் மிகுந்த திருப்தியை உணர்வீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் நல்லாதரவு பெரும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணயுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். நீங்கள் பரஸ்பரம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் அன்பு வளரும்.

அதிக பண வரவு உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் மனஉறுதி காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை பெற்றுத் தரும்.

உங்கள் பணியின் மூலம் நீங்கள் பல நற்பலன்களைக் காணலாம் பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

உங்களின் சகஜமான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். அமைதியான சூழ்நிலை காரணமாக சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று நீங்கள் உங்கள் உணர்வுகளையும் உணர்சிகளையும் கட்டுபடுத்த வேண்டும். இன்று நன்மையான பலன்கள் காண நீங்கள் பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். இதன் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது.

சில கருத்துக்களை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்ளும் போது கடுமையாக நடந்து கொள்வீர்கள். எனவே சகஜமாக நடந்து கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் தேவையற்ற செலவுகளை செய்ய நேரும்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.10.2024




இன்று வளர்ச்சி நோக்கி செயலாற்ற உகந்த நாள். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய நீங்கள் உங்கள் புத்திசாலித்தனம் மற்றும் திறமையை பயன்படுத்துவீர்கள். இன்று முழுவதும் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

பணி தொடர்பான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே முடித்து விடுவீர்கள்.

உங்களின் இனிமையான வார்த்தை களால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு செல்வீர்கள் மற்றும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு பணம் கிடைக்கும் அது உங்களுக்கு தக்க நேரத்தில் உதவிகரமாக இருக்கும்.




இன்று முடிவுகள் எடுக்கும் போது அமைதியும் கட்டுப்பாடும் தேவை. எந்த செயலையும் செய்வதற்கு முன் நன்றாக யோசிக்க வேண்டும்.அனுசரனையான அணுகுமுறை நன்மை அளிக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. அதிகப் பணிகள் சுமையாக இருக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்ப்பது நல்லது. அகந்தைப் போக்கு உறவில் மகிழ்ச்சியை ஏற்படுத்தாது.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். உங்கள் செலவுகளில் கட்டுப்பாடு தேவை.

சிறப்பான ஆரோக்கியத்திற்கு முறையான உணவு முறையை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.




இன்று மிகவும் துடிப்பான நாளாக அமையும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களின் உறுதியான போக்கு மற்றும் மன உறுதி மூலம் வெற்றி காண்பீர்கள்.

சக பணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும். இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள இயலும்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். பணத்தை சுப காரியங்களுக்கு நீங்கள் பயன்படுத்த இயலும்.

இன்று சௌகரியங்கள் அதிகம் காணப்படும். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




சில குடும்ப பிரச்சினை காரணமாக கவலையுடன் காணப்படுவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் சிறப்பாக செயலாற்றலாம்.முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடத்தில் ஆக்கப்பூர்வமான பலன்கள் கிடைக்காது. இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணை உங்களிடம் வேறுபட்டு நடப்பதாக நீங்கள் உணர்வீர்கள். என்றாலும் நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்கள் துணை உங்களிடம் முழு அன்போடு இருப்பார்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இன்றைய அடிப்படை தேவைகளைக் கூட உங்களால் பூர்த்தி செய்து கொள்ள இயலாது.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA | No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co | www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park